# சைவசமய வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் பங்களிப்பு: அளவெட்டிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது

**நி.சிவாஜன்**

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையில் சைவசமய வளர்ச்சியில் சைவசமய நிறுவனங்கள் பெருமளவான பங்களிப் பினைச் செய்துள்ளன. இவை இலங்கையின் பல பாகங்களிலும் காலந்தோறும் தோற்றம் பெற்று வருகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டிப் பிரதேசத்தின் சைவசமய வளர்ச்சியில் அப்பிரதேசத்தில் காணப்படும் சைவசமய நிறுவனங்கள் பெரும் பங்களிப்பினை நல்கியுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு சைவசமய வளர்ச்சியில் சைவசமய நிறுவனங்களின் பங்களிப்பு: அளவெட்டிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதாக அமைகிறது. அளவெட்டிப் பிரதேசமானது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்ற அடிப்படையில் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டது. அளவெட்டிப் பிரதேசத்தில் காணப்படும் சைவசமய நிறுவனங்கள் சைவ சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பினை ஆராய்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு விபரண ஆய்வு, வரலாற்றாய்வு ஆகிய முறையியல்கள் ஊடாக இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாய்வில் களஆய்வு மூலமும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அளவெட்டிப் பிரதேச சைவசமய வளர்ச்சிக்குப் பிரதானமாக கும்பழாவளை சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம், பெரு மாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம், அளவோலை விநாயகர் ஆலயம், தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலயம், வெளிவயல் முத்துமாரியம்மன் ஆலயம், நாகவரத நாராயணர் ஆலயம் முதலிய சைவசமய நிறுவனங்களான கோவில்களும் சைவவாலிபசங்கம், மகாஜன சபை, அளவை இசைக்கலை மன்றம், சுப்பிரமுனிய ஆச்சிரமம், அறநெறிப்பாடசாலைகள், கலாசார மத்திய நிலையம் முதலிய சைவசமய நிறுவனங்களும் பெரும்பங்களிப்பினை ஆற்றிவருகின்றன. இவற்றில் முக்கியமான பங்களிப்புக்களாக ஆலயத்திருவிழாக்களை ஆற்றுதல், அறநெறி வகுப்புகளை நடாத்துதல், சமயதீட்சை வழங்குதல், கலை நிகழ்வுகளை அரங்கேற்றல், கற்றல் உதவித் தொகை வழங்குதல், அளவெட்டிப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளை நடாத்துதல், அளவெட்டி பிரதேச ஆலயங்களில் திருவாசக முற்றோதல், பன்னிருதிருமுறை முற்றோதல் செய்தல், முதியோர்களுக் கான சமயகலாசார விதி களைப்போதித்தல், அளவெட்டிப்பிரதேச கலைஞர்களைக் கௌரவித்தல், ஆலயத்திருவிழாக்களில் பண்ணிசைக் கச்சேரிகளைச் செய்தல், மதமாற்ற சமூக நிறுவனங்களை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் செய்தல், வறுமை நிவாரணங்கள் வழங்குதல் போன்றன காணப்படுகின்றன. அந்தவகையில் அளவெட்டிப் பிரதேச சைவசமய வளர்ச்சிக்கு சைவசமய நிறுவனங்கள் காத்திரமான பங்களிப்பினை ஆற்றியுள்ளமை அறியப்படுகின்றது. இவற்றுடன் இத்தகு சைவசமய நிறுவனங்கள் அளவெட்டிப் பிரதேச மக்களின் சமூகத்தேவைகளிற்குத் துணைபுரிபவையாகவும் விளங்குகின்றன. அளவெட்டி தவிர்ந்த இலங்கையில் காணப்படும் ஏனைய பிரதேசங்களின் சைவசமய நிறுவனங்களுக்கு இவை முன்னுதாரணமாகத் திகழ்கின்றமையை இந்த ஆய்வு அடையாளப்படுத்தியுள்ளது.

**திறவுச்சொற்கள்:** சைவசமயம், அளவெட்டிப்பிரதேசம், சைவசமய நிறுவனங்கள், சமூகப்பங்களிப்பு, சமூகமேம்பாடு

இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Sovajanniththianantham@gmail.com